## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.83/2018

வாதி தரப்பு 1வது சாட்சி மனிஷா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனிஷா | வயது | : | 22/24 |
| தகப்பனார் பெயர் | : | செந்தில்குமார் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | குளத்தூர் நாயக்கன்பட்டி | தொழில் | : | |

நாள்-04.09.2024

வா.சா.1

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1) நான்** தாக்கல் செய்துள்ள வாக்குமூலம் பற்றி விபரம் தெரியும். நான் திருப்பூரில் உள்ள கம்பெனியின் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு ஒரு தங்கை உள்ளார். அவர் எம்.காம் படித்து வருகிறார். எனது அப்பா சென்னையில் இருந்து வருகிறார். எனது அப்பாவுடன் பேச்சு வார்த்தை இல்லை. எனது அம்மாவும் பேசமாட்டார். கடந்த நான்கு வருடங்களாக பேச்சு வார்த்தை அவருடன் எங்களுக்கு இல்லை. எனது தங்கையுடன் மட்டும் பேசுவார். ஏதாவது விஷேசத்தில் பார்த்தால் மட்டும் பேசுவார்.

2) எங்கள் ஊரில் உஷா என்பவர் உள்ளார். அவரது மகன் திருமணத்திற்கு வந்தார். என் அம்மாவும் வந்துள்ளார். இருவரும் தனித்தனியாக வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் என் அப்பாவும், அம்மாவும் உள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆகும்.

3) நான் இதற்கு முன்பு சென்னையில் அக்கவுண்ட்ஸில் வேலை பார்த்தேன். அப்போது என்னுடன் எனது அப்பாவும் ரூமில் தங்கியிருந்தார் என்றால் இல்லை. நான் தற்போது வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் எனது அப்பா எங்களுடன் நல்ல தொடர்பில்தான் இருக்கிறார் என்றால் இல்லை. எனது அப்பாவின் போன் நம்பர் என்னிடம் இல்லை.

4) எனது தாத்தாவின் சொத்தை எனது பெரியப்பாவிற்கும், எனது அப்பாவிற்கும் பிரித்து கொடுத்த விபரம் தெரியுமா என்றால் பிரித்து கொடுக்கவில்லை.

5) எனது அப்பாவின் அக்கா பாப்பா என்பவர் அ.வ.எண்.118/2008 சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டையில் வழக்கு தாக்கல் செய்து நடந்த விபரம் எனக்கு தெரியும். அதில் பிறப்பித்த முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதி நிலை தீர்ப்பாணையின் படி சொத்தை பிரித்து கொண்டார்கள் என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி சொத்தை பிரித்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தை பிரித்து விற்று அதற்கான பணத்தை பெற்றுக்கொண்டார்கள். அவ்வாறு சொத்தை பிரித்து விற்று பணத்தை பெற்றுக்கொண்டார்கள் என்ற விபரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

6) எனது பெரியப்பா மற்றும் எனது அப்பா, எனது தாத்தா காலத்திலேயே மது அருந்திவிட்டு ஊதாரிதனமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் எனது தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் சொத்து எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 15.04.2002 தேதியிட்ட ஆவணம் மூலம் என் பெரியப்பாவிற்கும், எனது அப்பாவிற்கும், எனது தாத்தா குப்புசாமி ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சொத்தை பிரித்து கொடுத்த ஆவணம் என்றால் அப்படித்தான் உள்ளது. எனக்கு அதை பற்றி தெரியாது.

7) அசல் வழக்கு எண். 243/2014, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி தெரியாது. அவர்கள் எனது அப்பாவிற்கு நோட்டீஸ் அனுப்பியது மட்டும் தெரியும்.

8) எனது அப்பாவின் அக்கா பாப்பா என்பவர் அ.வ.எண்.118/2008 தாக்கல் செய்துள்ள வழக்கில் ஒருதலைபட்சமாக எனது அத்தை தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தபோதுதான் 1,2 பிரதிவாதிகளுக்கே தெரியவந்தது என்றால் சரியல்ல. அது தெரியாது என்பதும், அதில் உள்ள உயில் சொத்தை மறைத்து அசல் வழக்கு எண். 243/2014, வழக்கினை தாக்கல் செய்து அதில் தடை உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. உயில் எழுதியதே யாருக்கும் தெரியாது. அவ்வாறு அந்த வழக்கில் தடை உத்தரவு பெற்றபின்தான் எனது அத்தை எங்களுடன் சமரசமானார்கள் என்றால் சரியல்ல. என் அப்பாவும், என் அத்தையுடன் சேர்ந்துகொண்டு அந்த வழக்கில் ஒருதலைபட்சமாகி உள்ளார் என்றால் சரியல்ல. அதேமாதிரிதான் எனது அப்பா இந்த வழக்கிலும் தான் வெளியூரில் இருப்பதாக நாடகமாடி வருகிறார் என்றால் சரியல்ல.

9) என் அப்பா, அம்மாவின் கையெழுத்துக்கள் எனக்கு தெரியும். 04.03.2016ல் மூர்த்தியும், எனது அப்பாவும் சரிசமமாக பங்கு பிரித்துகொண்டதில், அதில் உள்ள பொதுப்பாதைக்கு ஒரு செண்டிற்கு ரூ.5000/-வீதத்தில் ரூ.99,500/-க்கு 10.10.2024ல் ரூ.25000/- பெற்றுக்கொண்டு, பாக்கி ரூ.25000/- த்தை கொடுக்க வேண்டும் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அப்படித்தான் எழுதப்பட்டுள்ளது. அதில் 32 செண்ட் மூர்த்தி என் அப்பாவிற்கு கொடுக்க வேண்டும் என்று உள்ளது என்றால் அப்படித்தான் எழுதப்பட்டுள்ளது. அது என் அப்பா கையெழுத்து இல்லை.

10) 04.01.2016 ல் உமாவிற்கும், பிரசாத்திற்கும், எனது அம்மா,அப்பா எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றும், ரூ.1,50,000/- பெற்றுக்கொண்டோம் என்றும், 2014ம் வருடம் எழுதிய கடிதத்தின் அடிப்படையில் 173 சா்வே எண்ணில் உள்ள 32 செண்டை 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் எழுதி கொடுக்க வேண்டும் என்று உள்ளது என்றால் அப்படித்தான் உள்ளது. அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் எனது அப்பாவும், அம்மாவும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் அது அவா்களின் கையெழுத்து இல்லை.

11) எனது தகப்பனாருக்கு ஒதுக்கிய சொத்தில் எனது தாத்தாவான குப்புசாமியின் பெயா் இருந்ததால், அவா் சொத்தை விற்கும்போது, எனது பெரியப்பாவான மூா்த்தி, எனது அத்தை பாப்பா, எனது பாட்டி ராதா ஆகியோா்களை உட்படுத்தி சுமாா் 4 3/4 ஏக்கருக்கு மேல் எனது அப்பா விற்றுள்ளாா் என்றால் இல்லை.

12) 1ம் பிரதிவாதி உமாவிற்கு 1 ஏக்கா் 10 செண்ட் நிலத்தை 2009ம் வருடம் கிரையம் செய்தது தெரியும். என் பாட்டி ராதாவும், எனது அம்மாவும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளாா்கள் என்றால் ஆமாம். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகும்.

13) எனது அப்பா மீனாட்சி என்ற நபருக்கு 10.10.2013 தேதியில் ஒரு சொத்தை விற்றுள்ளாா் என்றால் என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் அப்படித்தான் உள்ளது. எனக்கு அதுபற்றி தெரியாது. அதிலும் எனது அப்பா, எனது பெரியப்பா மற்றும் அத்தை, பாட்டி ஆகியோா்களை அழைத்துபோய் சொத்தை விற்றுள்ளாா் என்றால் எனக்கு தெரியாது.

14) எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள பாலகிருஷ்ணன் வாத்தியாருக்கு 7 மா நிலத்தை எனது அப்பா விற்றுள்ளாா் என்றால் அது எனக்கு தெரியாது. அதேபோல் சதாசிவம், கோவிந்தராஜன் ஆகியோா்களுக்கும் விற்றுள்ளாா் என்றால் அது எனக்கு தெரியாது.

15) விடுதலை ஆவணம் 9.10.2013ல் எழுதி வாங்கியது எனக்கு தெரியாது. விடுதலை ஆவணத்தை பொறுத்து எனது அத்தை அ.வ.எண்.118/2008 தீா்ப்புப்படி தனக்கு எதுவும் வேண்டாம் என்று எழுதி கொடுத்தாா்கள் என்றால் எனக்கு எதுவும் தெரியாது.

16) நாயக்கா்பட்டியில் உள்ள வீட்டில் யாரும் இல்லை. எனது தாத்தா குப்புசாமி பெயாில் மின் இணைப்பு உள்ளது. அதில் ரம்யா பெயாில் ஒரு மின் இணைப்பு உள்ளது என்றால் இல்லை. அதை நாங்கள் வாடகைக்கு விட்டிருக்கிறோம் என்றால் சாியல்ல. அது ராதாகிருஷ்ணன் என்ற வேறு தாத்தாவிற்கு சொந்தமான இடம். எனது அப்பாவும், பெரியப்பாவும் பக்கத்தில் உள்ள இடத்தை ராதாகிருஷ்ணனுக்கு கொடுத்துவிட்டு, அவா் இடத்தை மாற்றி கொண்டாா்கள் என்றால் ஆமாம். அதில்தான் என் அம்மா பெயருக்கு மின் ரசீது உள்ளது. அது இன்னும் பதிவு செய்யவில்லை. அதில் இருப்பது நாங்கள் கட்டிய வீடு என்பதால் நாங்கள் வாடகைக்கு விட்டிருக்கிறோம். அது தாத்தா

கட்டிய வீடு என்றால் சரியல்ல. என் அம்மாவின் நகைகளை அடகு வைத்து கட்டினோம். இதை எனது பிராதில் சொல்லவில்லை.

17) இன்று வரை எனது அப்பா என் அத்தையை வைத்து ஏற்கனவே நாடகமாடியதுபோல், இப்போது எங்களை தூண்டி சொத்தை அபகரிக்க நாடகமாடி வருகிறார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.